தலைப்புச் செய்திகள்

1. தூய்மை நகரங்களுக்கு வழங்கப்படும் ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

2. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தில் மகத்துவம் மிக்க மாற்றங்களை கொண்டு வருவதில் தமது அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் சாலை அமைக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்துதலுக்காக கடந்த 11 ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

4. சென்னை, திருவள்ளூர், கோவை, நீலகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

தூய்மை நகரங்களுக்கு வழங்கப்படும் ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார். நாட்டில் 24 நகரங்களுக்கும், 20 மண்டலங்களுக்கும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் 54 விருதுகள் இதில் வழங்கப்படுகிறது.

2016ஆம் ஆண்டு முதல் தூய்மை நகரங்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த விருதுகள், நகரம் முழுவதிலும் உள்ள தெருக்கள், சாலைகள் போன்றவற்றில் உள்ள திடக் கழிவுகளில் இருந்து நிலைத்த தன்மை கொண்ட பொருட்களை உருவாக்குவதற்காக வழங்கப்படுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் கழிவுகளை குறைத்து அதன் மூலம் பயனுள்ள பொருட்களை உருவாக்கும், மறுசுழற்சி செய்வதற்குமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தூய்மைப் பணியாளர்களின் நலன் பாதுகாக்கப்படுவதுடன், அவர்கள் நன்மதிப்புடன் வாழ்வாதற்காக வகை செய்வதே இந்த இயக்கத்தின் மற்றொரு அம்சமாகும்.

<<<<>>>>

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தில் மகத்துவம் மிக்க மாற்றங்களை கொண்டு வருவதில் தமது அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதை நோக்கமாகக் கொண்டு வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முடிவு பயிர் சாகுபடியை அதிகரிக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் வருவாயையும் அதிகரிக்கச் செய்யும் என்று கூறியுள்ளார்.

அதேபோல் தேசிய அனல்மின் கழகத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதன் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை வலுப்படுத்த வேண்டும் என்ற நாட்டின் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சாலை அமைக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்துதலுக்காக கடந்த 11 ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலை அமைக்கும் பணிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணியின் முன்னேற்றம் குறித்த கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், திருவண்ணாமலை மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் இருவழிச் சலைகள், நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

நகரப் பகுதிகளில் புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதாக திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் அனைவருக்கும் சமமான நீதி வழங்கப்படும் வகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சமூகநீதித் துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார். ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் சாதனை குறித்து எடுத்துரைத்தார். சமூகத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி குறித்து அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக கூறினார். மொழியின் பெயரால் அரசியல் செய்யக்கூடாது என்று தெரிவித்த திரு. ராம்தாஸ் அத்வாலே, ஜனநாயகத்தின் மிகப்பெரிய வலிமை அரசியல் சாசனம் என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

திருப்பூர் கோவில்வழியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 34 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தப் பேருந்து நிலையத்தில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், கோவை, நீலகிரி, தேனி, தென்காசி மாவட்டங்களின் குறிப்பிட்ட பகுதிகளிலும் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அவர் தெரிவித்தார்.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களில் 400 ட்ரோன்களை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியதில் எரிசக்தி கட்டமைப்புகள் சேதமடைந்ததாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

------------

தென்னாப்பிரிக்கா மீது அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத வரி மூலம் வேளாண் மற்றும் வாகன உற்பத்தி துறை பாதிக்கப்படக் கூடும் என்று தென்னாப்பிரிக்க மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

------------

ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மாநிலங்களுக்கு இடையே நிலவும் நீர் தொடர்பான விவகாரங்களுக்கு தீர்வு காண இரு மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் சார்பில் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

------------

வளர்ச்சியடைந்து வரும் இந்திய ஜவுளித் தொழில்களில் முதலீடு செய்யுமாறு ஜப்பான் நிறுவனங்களுக்கு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

------------

பீஹாரில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நடைபெற்று வரும் வாக்காளர் சரிபார்ப்பு நடவடிக்கைகளின்போது இதுவரை 6 கோடியே 99 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

------------

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் புதிய சுற்றுலா மாளிகை கட்டிடம் கட்டுவதற்கு மாநில சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. நாசர் மற்றும் ஆட்சியர் திரு. பிரதாப் ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு குறித்த முகாம் வரும் 21ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

மாணவிகள் மீது நடத்தப்படும் குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் வகையில் ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் 'போலிஸ் அக்கா' திட்டத்தை காவல்துறை கண்காணிப்பாளர் சுஜாதா தொடங்கி வைத்தார்.

------------

கள்ளக்குறிச்சி அருகே சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சியில் புதிதாக அமைக்கப்பட உள்ள வாரச்சந்தை குறித்த பணிகளை ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் பார்வையிட்டார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சவுத்தாம்டனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 258 ரன் எடுத்தது.

259 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 48 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 262 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக தீப்தி ஷர்மா 62 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுநாள் லண்டனில் நடைபெற உள்ளது.

------------

20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

-------------

சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா தங்கக் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்திய ராணுவ அணி 2-1 என்ற கோல் கணக்கில் மஹாராஷ்டிரா அணியையும், இந்திய கடற்படை அணி 4-1 என்ற கோல் கணக்கில் மத்திய நேரடி வரிகள் வாரிய அணியையும் வென்றன.

---------------

ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 7-5, 6-3 என்ற செட் கணக்கில் கொலம்பியாவின் **Nicolas –** மெக்சிகோவின் **Reyas Varela** இணையை வென்றது.

------------

சான்மெரினோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Bandhia –** பல்கேரியாவின் **Alexandar Donski** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட் கணக்கில் பொலிவியாவின் **Alejandro – Fedrico** இணையை வென்றது.

**<<<<The End>>>>**